**அசல் வழக்கு எண்.20/2019**

**தேதி: 22.07.2025.**

**வா.சா.1: திருமதி. பிரியா, த/பெ. நித்தியானந்தம்**

**1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

3வது பிரதிவாதி என் அம்மா. என் அம்மா தாவாவில் குறிப்பிட்டுள்ள 50 முதல் 92 வரையிலான அயிட்ட சொத்துக்கள் நடுக்குப்பம் கிராமத்தில் கிரையம் பெற்ற நிலங்கள் என்றால் சரிதான். அதை என் அம்மா மனைகளாக பிரித்து மனை பிரிவுகளாக போட்டார் என்றாலும், அதன் பெயர் லட்சுமி நகர் என்றால் மனைகளாக பிரிவுகளாக பிரித்தார், ஆனால் லட்சுமி நகர் என்பதா என்று எனக்கு ஞாபகமில்லை. மொத்தம் 1 ஏக்கர் 60 செண்ட் விஸ்தீரணம் என்றால் சரிதான்.

அதில் 48 மனைபிரிவுகள் என் அம்மா போட்டார் என்றால் எத்தனை மனை பிரிவுகள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தாவாவில் 50 முதல் 92 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளது மனைகள் தான் சரிதான். மனைகள் 2, 20, 27, 41 மற்றும் 42 ஆகிய மனை எண்கள் கொண்ட மனைகளை நடுக்குப்பம் கிராமம் பஞ்சாயத்திற்கு பூங்கா அமைப்பதற்காக என் அம்மா கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மனை பிரிவுகள் அமைப்பதற்கு ஒவ்வொரு மனை பிரவிற்கும் இடையில் சாலைகள் போடப்பட்டது என்றால் சரிதான்.

நடுக்குப்பம் பஞ்சாயத்தை இந்த தாவாவில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3வது மற்றும் 4வது மனையை ஒரு ஏழுமலை என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் 14வது பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 5வது மனையை ஒரு ரவி என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 6வது மனையை ஒரு ராணி

என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7வது மனையை ஒரு விக்னேஷ்வரன் என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 8வது மனையை ஒரு விஜயகுமார் என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 9வது மனையை ஒரு நாராயணமூர்த்தி என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10வது மனையை ஒரு வசந்தி என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 11வது மனையை ஒரு விஜயசாந்தி என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 12 முதல் 14வது மனைகளை ஒரு பாலு என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

15 மற்றும் 16வது மனையை ஒரு கணபதி என்பவருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் ஒரு 11-பிரதிவாதி என்றால் சரிதான். 11வது பிரதிவாதி கணபதி மேற்சொன்ன 15 மற்றும் 16வது மனையை ஒரு மூன்றாம் தரப்பினருக்கு விற்றுவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 17வது மனையை ஒரு கிருபாசங்கர் என்பருக்கு என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் 9-வது பிரதிவாதி என்றால்

சரிதான். கிருபாசங்கர் என்பவர் 17வது மனையை ஒரு கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றாலும், கிருஷண்மூர்த்தி அந்த சொத்தை சின்ன பொண்ணு என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன கிருஷ்ணமூர்த்தி மற்றும் சின்ன பொண்ணு ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

மனை எண் 18 மற்றும் 19-ஐ என் தாயார் சாமுண்டீஸ்வரி என்பருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 10வது பிரதிவாதி சாமுண்டீஸ்வரி மேற்சொன்ன 18 மற்றும் 19 மனைகளை ஒரு கௌரி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கௌரி என்பவரை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மனை எண்.20 நடுக்குப்பம் கிராமத்திற்கு பஞ்சாயத்திற்கு பாத்தியப்பட்ட பூங்கா என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.